# இஸ்லாமிய வரலாற்றை எடுத்துரைப்பதில் கனகாபிஷேகமாலை பெறும் முக்கியத்துவம்

M.H.F Risana[1] & Rahila Ziyad[2]

[1&2]*Department of Languages, South Eastern University of Sri Lanka.*

[1]fathimarisana937@gmail.com, [2]ziyadrahila@yahoo.com[2]

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ், சர்வ சமயங்கள் மற்றும் சமயம் சாராத இலக்கியங்களினால் செறிவுற்றது. எல்லாச் சமயத்தைச் சார்ந்த இலக்கியங்களும் தமிழில் தோற்றம் பெற்றுள்ளன. சங்க காலந்தொட்டு அறபு நாட்டவர் தமிழகத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர். 1950ஆம் ஆண்டிற்கு முன்னர் தமிழறிஞர்கள் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் இரண்டினை மாத்திரமே அறிந்திருந்தனர். பிற்காலங்களில் ஏனைய இலக்கியங்கள் தோன்றியிருப்பது கண்டறியப்பட்டன. இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் பல புதுவகைச் சிற்றிலக்கியங்கள் தோன்றியதோடு மரபுத் வழியைப் பின்பற்றி பல இலக்கியங்களும் படைக்கப்பட்டன. அவ்வாறான இலக்கியங்களில் காப்பியங்கள் முக்கியத்துவம் பெற்றவையாக விளங்குகின்றன. தமிழில் தோன்றியுள்ள காப்பியங்கள் தனித்தன்மை வாய்ந்தனவாகும். எல்லா மொழிகளிலும் காப்பியங்கள் தோன்றியுள்ளன. இஸ்லாமியப் பின்னணியில் தோன்றிய காப்பியங்கள் இஸ்லாமியக் காப்பியங்கள் எனப்படுகின்றன. அநேகமான இஸ்லாமியத் தமிழ் காப்பியங்கள் இஸ்லாமிய அடிப்படையிலேயே அமைந்துள்ளன. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு அம்சங்களைக் கொண்டதாக அமைவது பெருங்காப்பியங்களாகும். இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் இந்நான்கு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டமைந்த காப்பியங்கள் தோன்றியுள்ளன. இஸ்லாமிய அடிப்படையில் முஸ்லிம் புலவர்களால் பாடப்பெற்ற தமிழ்க் காப்பியங்களுள் காலத்தால் மூத்தது கனகாபிஷேகமாலையாகும். கனகாபிஷேகமாலையில் அலி(ரழி), இமாம் ஹுஸைன் (ரழி) ஆகியோரின் வரலாறுகள் இணைச் சங்கிலியாக அமைவதைக் காணலாம். நபி பெருமானாரின் இறுதிக் காலக்கட்டத்திலிருந்து தொடங்கும் இக்காப்பியம் ரசூலின் பின்னர் வந்த கலீபாக்களின் வரலாறுகளை கூறுகிறது. இந்நூல் 1648 இல் படைக்கப்பட்டது. கனகாபிஷேகமாலை பாடுவதற்கு கனகவிராயருக்கு அடிப்படையாக அமைந்தது 'முக்கத்திலூசன்' எனும் நூலாகும். இஸ்லாமிய வரலாற்றைக் கூறுவதில் கனகாபிஷேகமாலையின் வகிபங்கு முக்கியமானது. ஆதாரபூர்வமான இஸ்லாமிய வரலாறுகள் மற்றும் வரலாற்றுக்கு மாற்றமான கருத்துக்களை கனகாபிஷேகமாலை குறிப்பிடுகின்றது. இஸ்லாமிய வரலாற்றைக் கூறுவதில் கனகாபிஷேகமாலை வகிபங்கு எவ்வாறு அமைந்துள்ளது என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இஸ்லாமிய வரலாற்றைக் கூறுவதில் கனகாபிஷேகமாலையின் வகிபங்கினை ஆராய்தல், கனகாபிஷேகமாலை கூறும் வரலாற்றுக்கு முரணான விடயங்களை ஆராய்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது ஓர் பண்புசார் ஆய்வாகும். இவ்வாய்வில் சமூகவியல் அணுகுமுறை, விவரணவியல் அணுகுமுறை, மொழியியல் அணுகுமுறை போன்ற ஆய்வுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வுக்கு முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. குர்ஆன் மற்றும் ஹதீஸ் முதலியன முதலாம் நிலைத் தரவுகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன.*

*இந்நூல் தொடர்பாக வெளிவந்த நூல்கள், கட்டுரைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள், மற்றும் இணையப் பக்கங்கள் போன்றன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

***திறவுச் சொற்கள்:*** *இஸ்லாமியத் தமிழ் இலக்கியம், கனகாபிஷேகமாலை, காப்பியம், புனைவுகள், வரலாறுகள்*

---

### *1. ஆய்வு அறிமுகம்*

*தமிழிலக்கிய வரலாற்றில் சமய இலக்கியத்தின் தோற்றத்திற்கு பலவிதமான காரணங்கள் செல்வாக்குச் செலுத்தின. ஒரு சமயத்தின் வளர்ச்சித் தாக்கத்திலிருந்து தங்களது சமய நசிவை நீக்கிப் பாதுகாக்கும் விதமாக பல இலக்கிய முயற்சிகள் நிகழ்ந்து வந்துள்ளன. சமூக, அரசியல், பொருளாதாரக் காரணிகள் இம்முயற்சிகளின் பின்னணியிலிருந்திருக்கின்றன. அந்நிலை இடைக்கால இலக்கிய முயற்சிகள் வரை முழு வேகத்தில் செயற்பட்டிருக்கின்றன. இதற்கடுத்த காலக்கட்டத்தில்தான் கிறிஸ்தவ, இஸ்லாமிய இலக்கிய முயற்சிகள் முனைப்புப் பெற்றிருக்கின்றன. கம்பராமாயணம் முதலான காவியங்களின் இலக்கியத் தாக்கங்கள் பிற்கால இலக்கியங்களில் சில மரபுகளை உருவாக்கின.*

*இந்நிலையில் தான் சைவ, வைணவ, சமய இலக்கியங்கள் தமது சமய வளர்ச்சிக்கு உதவும் என்ற நோக்கில் சமயக் குறவர்கள் பல புதிய வடிவங்களை அறிமுகப்படுத்த முனைந்தனர். சைவக் குறவர்களின் வரலாறு கூறும் 'பெரிய புராணம்' 'கனகாபிஷேகமாலை' முதலான நூல்கள் வரலாறு தழுவிய காப்பிய முயற்சிகளுக்குத் தூண்டுகோலாயிருந்தது என்பர். கனகவிராயரது 'கனகாபிஷேகமாலை'யின் காப்பியக் கட்டுக்கோப்பு, பெரியபுராண கட்டமைப்பை நினைவூட்டுகிறது. பெரிய புராணத்தில் சுந்தரரின் வரலாறு இணைச்சுடராக இருப்பது போல அலி(ரழி), இமாம் ஹூஸைன் (ரழி) ஆகியோரின் வரலாறுகள் இணைச் சங்கிலியாக அமைவதைக் காணலாம். நபி பெருமானாரின் இறுதிக் காலக்கட்டத்திலிருந்து தொடங்கும் இக்காப்பியம் ரசூலின் பின்னர் வந்த கலீபாக்களின் வரலாறுகளை வகைப்படுத்திச் சொல்கிறது.*

*இஸ்லாமிய அடிப்படையில் முஸ்லிம் புலவர்களால் பாடப்பெற்ற தமிழ்க் காப்பியங்களுள் காலத்தால் மூத்தது கனகாபிஷேகமாலையாகும். இதனை பாடியவர் செய்கு நயினார்கான். 'கனகவிராயர்' என்ற சிறப்பு பெயர் பெற்றவர். 'கனக' எனும் சொல் இந்நூலுக்கும் இந்நூலாசிரியருக்கும் புலவருக்கும் அடைமொழியாக அமைந்திருப்பது நோக்கத்தக்கது.*

*கனகாபிஷேகமாலையை 'கனகம்10 அபிஷேக மாலை' என பிரிக்கலாம். கனகம் என்பதன் பொருள் பொன். அபிஷேகம் என்றால் குளித்தல், ஸ்நானம் செய்தல் என பொருள்படும். கனகாபிஷேகம் என்பது பொன்னை வார்த்தல் என பொருள்படும். அபிஷேகம் எனும் சொல் பரந்த அடிப்படையில் ஓர் அரசனுக்கு முடிசூடுவதைக் குறிக்கும். இக்காப்பியத்தில் எட்டு மன்னர்கள் ஒருவர் பின் ஒருவராக ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்றனர். எனவே, முடிசூட்டப்படுதல் எனும் செய்தி ஒரு மாலையாகப் பாடப்படுகின்றது என்பதால் இப்பெயர் பொருந்துகிறது. இக் காப்பியம் நான்கு பரம்பரையின் வரலாற்றுக் கதையை கூறுகின்றது.*

*கனகாபிஷேகமாலை' பாடுவதற்கு கனகவிராயருக்கு அடிப்படையாக அமைந்தது 'முக்கத்திலூசன்' எனும் நூலாகும். 'பஹாவுத்தீன் மகுதூம்' என்பவரின் படைப்பே இந்நூல். 35*

*படலங்களில் 2791 பாடல்கள் உள்ளன. பிற காப்பியங்களில் இடம்பெறாத நூற்பயன் கூறும் முறையும் நாட்டுப் படலம், நகரப் படலம் ஆகிய படலங்களும் இடம் பெற்றுள்ளன. இங்கு இடம் பெற்றுள்ள சக்ருவான் என்பவளின் சுயம்வரம் பிற காப்பியங்களில் இல்லை.*

*முகம்மது நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னர் அவர்களின் பிரதிநிதியாக ஆட்சி புரிந்த கலீபாக்களை நான்கு செய்யுட்களில் புகழ்ந்த ஆசிரியர் நபி பெருமான் (ஸல்) அவர்களின் தோழர்களுள் மிகச் சிறந்தவர் எனக் கருதப்பெற்ற தோழர் பதின்மரை வாழ்த்துகிறார். பதிகப்படலத்தில் உள்ள ஏழாம் செய்யுளில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையின் இறுதி காலகட்டத்தில் நிகழ்ந்த சில சம்பவங்கள் குறிப்பிடப்படுகின்றன.*

***2. இலக்கிய மீளாய்வு***

*இவ் ஆய்வுக்காக பின்வரும் நூல்களும், ஆய்வுக் கட்டுரைகளும் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. செய்யிது முஹம்மது ஹஸன் என்பவரால் எழுதப்பட்ட 'கனகாபிஷேகமாலை' (1990) எனும் நூலில் வரலாறுகளும் புனைவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் இதில் குறிப்பிடப்பட்ட உண்மைச் சம்பவங்களுக்கு ஆதாரங்கள் வழங்கப்படவில்லை. எம்.ஏ.எஸ்.எப் ஸாதியா அவர்களால் களம் எனும் இதழுக்கு 'இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் தமிழ் இலக்கியங்களின் செல்வாக்கு' (2019) இவ்வாய்வுக் கட்டுரையில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் எவ்வாறு தமிழ் இலக்கிய மரபுகள் பின்பற்றப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முகம்மது உவைஸ், ம. அஸ்மல்கான், பீ. மு. அவர்களால் எழுதப்பட்ட 'இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு' (1986) எனும் நூலில் இஸ்லாமிய வரலாறுகளும் புனைவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனாலும் ஆதாரங்கள் சரியான முறையில் வழங்கப்படவில்லை.*

*சைய்யிது அஹமது.எம்.கே 'தமிழ் வளர்த்த முஸ்லிம்கள்' (1964) எனும் நூலில் கனகாபிஷேகமாலையின் ஆசிரியர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். பல்வேறு இணையப்பக்கங்களில் கனகாபிஷேகமாலை குறித்த தகவல்கள் இடம் பெற்றிருந்தாலும் அதில் எந்தளவுக்கு உண்மைத்தன்மைகள் இடம் பெற்றுள்ளன என்பது ஐயமே.*

*ஆகவே இத்தகைய ஆய்வுகள் காணப்பட்டாலும் 'இஸ்லாமிய வரலாற்றை எடுத்துரைப்பதில் கனகாபிஷேகமாலை பெறும் முக்கியத்துவம்' பற்றி எந்த ஆய்வுகளும் இதுவரை வெளிவந்ததில்லை. கனகாபிஷேகமாலை தொடர்பான அதிகமான கட்டுரைகளே வெளிவந்துள்ளன. எனவே இந்த அடிப்படையில் இந்த ஆய்வானது முக்கியத்துவம் உடையது.*

***3. ஆய்வு முறையியல்***

*இது ஓர் பண்புசார் ஆய்வாகும். இவ்வாய்வில் சமூகவியல் அணுகுமுறை, விவரணவியல் அணுகுமுறை, மொழியியல் அணுகுமுறை போன்ற ஆய்வுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்*

***தகவல் சேகரிப்பு முறைகள்***

*இவ்வாய்வுக்கு, தகவல் சேகரிப்பு முறைகளாக முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. குர்ஆன் மற்றும் ஹதீஸ்கள் முதலியன முதலாம் நிலைத் தரவுகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்நூல் தொடர்பாக வெளிவந்த நூல்கள்,*

*கட்டுரைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள்;, மற்றும் இணையப் பக்கங்கள் போன்றன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

***4. கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்***

***4.1 கனகாபிஷேகமாலை கூறும் வரலாறுகள்***

*கனகாபிஷேகமாலையில் இஸ்லாமிய வரலாறு தொடர்பில் கூறப்பட்டுள்ள பல விடயங்கள் உண்மைத்தன்மையுடையனவாக அமைந்துள்ளன. அவற்றை அல்குர்ஆன் ஹதீஸ், மற்றும் இஸ்லாமிய வரலாற்று நூல்களின் துணைகொண்டு நோக்கமுடியும்.*

*'கனகாபிஷேகமாலை' பாட்டுடைத் தலைவராக பெருமானாரின் பேரரான உசைன் (ரழி) அவர்களானமையினால் அவரையும் அவருடைய சகோதரரையும் குறித்த செய்திகளுக்கே இக்காப்பியத்தில் முதலிடமளிக்கப்பட்டுள்ளன. பதிகப்படலத்தில் உள்ள ஏழாம் செய்யுளில் ஆசிரியர், நபி(ஸல்) அவர்களுடைய வாழ்க்கையின் இறுதி காலகட்டத்தைக் குறிப்பிடுகின்றார்;. நபிகள் நாயகம் இரட்டை நாக்குடைய பாம்போடு உரையாடினார்கள். நபி (ஸல்) அவர்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டது. அவர்கள் கட்டிலில் தனித்திருக்கவேண்டியிருந்தது. அப்போது அங்கு வந்தவர்களுக்கு இறுதி உபதேசம் செய்தார்கள். மேலும் அவர்கள் சுகவீனமுற்று இருந்ததால் தொழுகை நடாத்துவதற்கு இமாமாக அபூபக்கர் (ரழி) அவர்களை நியமித்தார்கள். பின்னர் அண்ணலுடைய உயிர் பிரிந்தது.*

*கனகவிராயர் ஓர் உண்மை நிகழ்ச்சியை வர்ணிக்க முற்பட்டிருப்பதால் முன்கூட்டியே சில செய்திகளைக் கூறுவதற்கு உண்மை நிகழ்ச்சிகளையே பயன்படுத்தியுள்ளார். வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் பெருமானார் முகம்மது (ஸல்) அவர்களின் முன்னிலையில் கூறிய சில விவரங்களையே கனகவிராயர் தமது காப்பியத்துக்கு முன் நிகழ்ச்சியாக குறிப்பிட்டுள்ளார்.*

*ஒரு நல்ல நாளன்று குறைஷி குலச் சிறுவர்கள் புத்தாடை அணிந்து மகிழ்ச்சியாக இருந்தனர். ஆனால் சிறுபாலகராய் இருந்த ஹசன், ஹூசைன் (ரழி) இருவரும் அத்தகைய வாய்ப்பைப் பெறவில்லை. நபி (ஸல்) அவர்கள் அவ்விருவரும் அழுவதற்கான காரணத்தை வினவ, அவர்களிருவரும் தமக்கு புத்தாடை கிடைக்கவில்லை என்று கூறினர். அச்சந்தர்ப்பத்தில் இறைவனின் ஆணைப்படி வானவர்; ஜிப்ரீல் (அலை) அவர்கள் இரண்டு வெள்ளையாடைகளை ஒரு தட்டிலே ஏந்தியவர்களாக அங்கு வந்தார்கள்.*

*இவ்வாடைகளைப் பெற்றுக்கொண்ட பேரர்கள் வெள்ளையாடைகளை விரும்பவில்லை என்று இருவரும் கூறினர். உடனே நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அல்லாஹ்வை தொழுதுவிட்டு; அந்த வெள்ளாடைகளை பார்த்தனர். அவ்வாறு பார்த்த மாத்திரத்தே அந்த வெள்ளையாடைகள் இரண்டும் வெள்ளை நிறமாறி வேறு இரண்டு நிறங்களினால் விளங்கின. அவற்றை இருவரும் அணிந்து கொண்டார்கள். ஹசன் (ரழி) அவர்கள் பச்சைப்பட்டை விரும்பியெடுத்தமைக்கும் உசைன் (ரழி) அவர்கள் செம்பட்டை விரும்பியெடுத்தமைக்கும் உள்ள தாத்பரியத்தை எடுத்து கூறினார்கள். ஹசனார் அவர்கள் ஆட்சி செய்யும்பொழுது நஞ்சூட்டப்பட்டுக் கொல்லப்படுவார்கள் என்றும் உசைனார் அவர்கள் சிவப்பு பட்டாடையை எடுத்துக் கொண்டாதால் நாடல்லாத காட்டிலே பாதகன் ஒருவனால் கொல்லப்படுவார்கள் என்று ஜிப்ரீல் (அலை) அவர்கள் கூறினார்கள்.*


ISBN: 978-624-5736-55-3

***'நானந் தருந்தோ ணபியே நபிக்க ரசே***

***ஆனந் தமாக வளரு மதியே உசைனார்***

***சேனந் தொடர் வேலார் செம்பட் டெடுத்ததினால்***

***காளந் தனிலே கருவியான் மாய்வ ரென்றார்.'***

***(உவைஸ், அஜ்மல்கான், 1986: ப 297)***

*இச்செய்தியை ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலமாகக் கேட்டதும் அனைவரும் துயரில் ஆழ்ந்தனர்.*

*கனகவிராயர் தமது பாட்டுடைத்தலைவருக்கு நேரவிருக்கும் துன்பத்துக்கு வழிகோலியவர்களை பற்றிக் குறிப்பிட்டுவிட்டு அப்பால் பெருமானாரின் இறுதிக்கால வாழ்க்கையை விவரிக்கின்றார். பெருமானார் அவர்கள் அன்னை மைமூனா அவர்களின் இல்லத்தில் இருக்கும்பொழுது காய்ச்சலால் பீடிக்கப்பட்டார்கள். எல்லா மனைவியரையும் அழைத்து அவர்களின் அனுமதியுடன் அன்னை ஆயிஷா நாயகி அவர்களின் இல்லத்திற்குச் சென்றார்கள். சுகவீனம் கடுமையாகியது. இதனை அறிந்ததும் பாத்திமா (ரழி) அவர்கள் தம் நிலையிழந்து அழுதுபுலம்பி 'முதலில் அன்னையாரை இழந்தேன் இப்பொழுதோ எனக்குத் துணையாக இருந்த தந்தையாரை இழக்கின்றேன். என்னால் இனி வாழமுடியாது என்னையும் உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்' என்று கூறினார்கள். இதை பார்த்துக்கொண்டிருந்த பாத்திமா நாயகியை நோக்கி 'நான் இறந்து ஆறுமாதங்களில் நீ என்னுடன் சேர்வாய்' என்று மலர்ந்தருளினார்கள். அவ்வாறே நிகழ்ந்தது என வரலாறு கூறுகிறது. மறைவு அவர்களுடைய அறுபத்து மூன்றாவது வயதில் நிகழ்ந்தது.*

***'நீர்தான் என்னை முதலில் சுவர்க்கத்தில் சந்தீப்பீர்.' (அல்ஹதீஸ்: ஸஹிஹுல் புகாரி)***

*நபி (ஸல்) அவர்களின் மரணத்தை தொடர்ந்து அபூபக்கர் (ரழி) அவர்கள் ஆட்சி புரிந்தார். தொடர்ந்து உமறு கத்தாப் (ரழி) அவர்கள் ஆட்சி புரிந்தார்கள். உமறு கத்தாப் (ரழி) அவர்கள் அபூலூலு என்னும் அடிமையினால் கத்தியால் குத்தப்பட்டு ஆவி பிரிந்தது.*

***'கி.பி 644ம் ஆண்டு பஜ்ர் நேரத் தொழுகையை நடாத்திக்கொண்டிருந்தபோது முஸ்லிம் போல் வேடம் தரித்த பைரோஸ் என்ற பாரசீக அடிமையால் வாளால் ஆறு முறை குத்தப்பட்ட உமர் (ரழி) மூன்று நாட்களின் பின் மரணமாணர்கள்' (அல்ஹதீஸ்: ஸஹிஹுல் புகாரி 3700)***

*நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தின் பக்கத்திலே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். உமறுகத்தாப் (ரழி) அவர்களின் மறைவுக்குப் பின்னர் உதுமான் (ரழி) அவர்கள் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களும் கொல்லப்பட்ட பின்னர் அலி (ரழி) அவர்கள் நான்காவது கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அலி (ரழி) அவர்களின் பின் அவரது மூத்த புதல்வர் ஹசன் (ரழி) அவர்கள் அரசுப் பொறுப்பை ஏற்றார்கள். முஆவியா (ரழி) அவர்களும் மரணமடைய ஆளுனர் பொறுப்பை அவர் புதல்வர் எசீது ஏற்றார். முன்னர் குறிப்பிடப்பட்டது போன்று ஹசன் (ரழி) அவர்களுக்கு நஞ்சூட்டப்பட்டது. எசீதின் வேண்டுகோளின் பேரில் நஞ்சு கலந்த பானம் ஹசனாருக்கு அளிக்கப்பட்டது.*

*ஹூசைனாரின் திருமணம் இஸ்லாமிய முறைப்படி நடைபெற்றமையைக் குறிப்பிடப்படுகிறது. அபூகுறைறா (ரழி) அவர்கள் வலீதாரராக நின்று கடமையாற்றினார்கள். திருமண உடன்பாட்டிற்கு மணமகளின் சம்மதம் அவசியமாகிறது. மணமகளின் தந்தை அல்லது குறிப்பிட்ட நெருங்கிய*


ISBN: 978-624-5736-55-3

*உறவினர் மணமகளிடமிருந்து சம்மதத்தைப் பெறுவர். சகருவான் அம்மையாரின் தந்தை இறந்துவிட்டமையால் அபூகுறைறா (ரழி) அவர்கள் வலீயாக நின்று சம்மதத்தைப் பெற்றார். இஸ்லாமியத் தமிழ் காப்பியம் என்பதனால் மணமகளின் சம்மதம் பெற்றே திருமணம் நடைப்பெற்றது என்று குறிப்பிடப்படுகின்றது.*

***'இறைநம்பிக்கை கொண்டவர்களே! பெண்களை (அவர்கள் மனப்பொருத்தம் இல்லாத நிலையில்) நீங்கள் பலவந்தப்படுத்தி அனந்தரமாகக் கொள்வது உங்களுக்கு கூடாது' (அல்குர்ஆன்: 4:19)***

***'ஆதி மாமறை ஓதிய அபூகுறை றாவை***

***மாது சம்மதம் கேண்மென்றார் கேட்டொலி நவில***

***வேத நூல்வழி யேயுது மானெனு மேலோர்***

***ஓது மாமணங் கன்னிக்கும் உசைனுக்கும் முடித்தார்'***

***(உவைஸ், அஜ்மல்கான், 1986: ப 314)***

*எசீது என்பவரின் ஆட்சியில்; உசைன் (ரழி) அவர்கள் கர்பலா என்னும் போர்க்களத்திலே கொல்லப்படுகிறார்கள். இது வரலாற்று நிகழ்ச்சி. ஆனால் நபிகள் பெருமானாரின் வார்த்தையைக் கேட்ட முஆவியா (ரழி) அவர்கள் தமது மனைவியை விவாகவிலக்கு செய்துவிட்டார் என முன்பு குறிப்பிடப்பட்டது. முஆவியா (ரழி) அவர்களுக்கு ஒரு மகன் அமையவேண்டும். அம்மகனுடைய ஆட்சியிலே உசைன் (ரழி) அவர்கள் கொல்லப்படவேண்டும். முஆவியா (ரழி) அவர்கள் மறுமணம் செய்தேயாகவேண்டும். இதற்கு முதன்முறைப்படலத்திலே களம் அமைத்துள்ளார் கனகவிராயர். முஆவியா (ரழி) அவர்களுக்கு சிறுநீர் கழிக்கவேண்டி ஏற்பட்டது. ஒரு சுவரொன்றை அடைந்தார்.*

*பறப்பன் என்பது விஷம் கக்கும் தேளைக் குறித்தது. இந்நஞ்சினை அகற்ற முடியாமல் போய்விட்டது. வலி தீர திருமணம் செய்தாக வேண்டும் என மருத்துவன் கூறினான். திருமணம் செய்தால் தமக்கு புதல்வர் பிறக்கக்கூடாது. ஏனெனில் புதல்வன் பிறந்தால்; உசைன் (ரழி) அவர்களுக்கு அப்புதல்வனால் ஆபத்து ஏற்படும் என்பது நபிகளாரின் கூற்று. இந்நிலைமையிலிருந்து விடுதலை பெற ஒரு வழியைக் கூறினார். ஹபசி குலத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய முடிவு கட்டினார்கள். அவள் பிள்ளைப்பேறு அற்றவளாயிருத்தல் வேண்டும், ஐம்பது வயதைக் கடந்தவளாக இருக்க வேண்டும். அத்தோடு ஹயில் இல்லாதவளாய் இருத்தல் வேண்டும். அத்தகைய தன்மைகளை உடையவளை திருமணம் செய்தார்கள்.*

*திருமணத்தின் பின் தேளின் விடம் நீங்கியது. முஆவியா (ரழி) எதனை விரும்பவில்லையோ அது நடந்துவிட்டது. அந்தப் பெண்மணி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அந்தப் பிள்ளைக்கு எசீது எனப் பெயரிட்டார்கள். முஆவியா (ரழி) பெருமானாரின் தோழர்களில் ஒருவர். யாருடைய ஆட்சியில் யாருடைய தூண்டுகோலின் பேரில் உசைன் (ரழி) அவர்கள் கொல்லப்பட்டார்களோ அவரும் தோன்றியாதல் வேண்டும். எனவேதான் எசீது அவர்களின் பிறப்பை எதிர்பாராத ஒரு நிகழ்ச்சியாக விவரித்துள்ளார்.*

*அடுத்து கனகவிராயருடைய கண்ணோட்டம் மதீனமா நகருக்கு செல்கின்றது. இஸ்லாத்தின் ஆரம்பகாலத்தில் அயல் நாட்டு; மன்னன் ஒருவன் பெருமானார் அவர்களிடம் ஓர் அற்புதம்*


ISBN: 978-624-5736-55-3

*செய்துகாட்டுமாறு கூறினான். நபி (ஸல்) அவர்கள்; அம்மன்னன் வேண்டுகோளை நிறைவேற்ற சந்திரனை அழைப்பித்தவர் என்று புகழப்படுகிறார்.*

***'(இறுதி) நேரம் நெருங்கிவிட்டது. சந்திரனும் பிளந்துவிட்டது. எனினும் அவர்கள் ஓர் அத்தாட்சியைப் பார்த்தால் (அதைப்) புறக்கணித்து விடுகிறார்கள். இது வழமையாக நடைபெறும் சூனியம்தான்' (அல்குர்ஆன்: 54:2)***

***'மக்காவாசிகள் முஹம்மது நபியிடம் ஓர் அற்புத சான்றைக் காட்டும்படி கேட்டார்கள். ஆகவே, சந்திரன் இரண்டு துண்டுகளாக பிளப்பதை தாம் இறைவனின் தூதர் என்பதற்கு சான்றாக முஹம்மது நபி காட்டினார்கள் என அனஸ் பின் மாலிக் (ரழி) கூறுகின்றார்கள்' (அல்ஹதீஸ்: ஸஹீஹ் முஸ்லிம்: 39: 5398)***

*இவ்வாறு இஸ்லாமிய வரலாற்றில் நடைப்பெற்ற உண்மையான வரலாறுகள் கனகாபிஷேகமாலையில் குறிப்பிடப்பட்டுள்ளன.*

*கனகாபிஷேகமாலையில் நுவலப்படும் வரலாறு, காப்பியக்கதைக்கேற்ப பல புனைவுகளை கொண்டதாகும். பொதுவாக, எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படும் 'ஆதாரப் பூர்வமான' செய்திகளைத் தவிர்த்து மிகையான கற்பனைகளும் காணப்படுகின்றன. ஆயினும் அவை பெரும்பாலும் நம் முஸ்லிம் தமிழ்ப் புலவர்களின் கற்பனையில் பிறந்தவை அன்று. அவற்றிற்கு உரைதேடிக்கொடுத்த அறிஞர்கள் மூலநூல்களில் கண்டு எடுத்துக்கொடுத்தவையே' என நஜ்முதீன் குறிப்பிடுகின்றார். (நஸ்முதீன்,1990: ப 18)*

*இந்நூல் கூறும் வரலாறு அத்தனையும் முழு உண்மை என்று ஏற்றுக் கொள்வதைவிட இதன் இலக்கியச் சிறப்புக்கு ஏற்றம் கொடுத்து இந்நூல் பாடப்பட்டுள்ளது என்பதே சாலப் பொருந்தும்.*

*ஆசிரியர் அவையடக்கம் கூறும்பொழுது கற்பனையின் உச்சநிலை அடைந்தமையினாலோ என்னவோ இஸ்லாத்துக்கு முரண்பாடான ஒரு செய்தியை குறிப்பிடுகிறார்.*

***'பணி என்பது பணத்தை உடையது. பணம் என்பது பாம்பின் படம். ஆயிரம் படங்களால் தரை எல்லாம் தாங்கிக் கொண்டிருக்கிறான் ஆதிசேடன் என்று குறிப்பிடுகிறார். அந்த மாபெரும் ஆதிசேடன் முன்பு மண்புழு போன்று தாம் இருப்பதாக உவமிக்கிறார். தமது சிறுமையைச் சுட்டிக்காட்டவே அவ்வாறு குறிப்பிடுகிறார். அரசர்கள் முடிபுனைந்துள்ளனர். அவர்களுடைய முடிகளிலே விலை மதிக்கமுடியாத மணிகள் தொங்கிக்கொண்டு இருக்கின்றன. அந்த மணிகளின் முன்னிலையில் சிறார்கள் அரையிலே அணியும் சின்னஞ்சிறு புரிமணி போன்றது தமது நிலை என குறிப்பிடுகிறார். பெரிய ஆதிசேடன் முன்னர் ஒரு மண்புழு போலும் மணிமுடிமுன் அரை நாண் புரிமணி போலும் கல்வி கேள்விகளிற் சிறந்த பண்டிதர் முன்னிலையில் சிறியவனாகிய ஆசிரியர் தமிழிற் கவிதை புனைய முற்பட்டார்' என இவ்வாறு அவையடக்கம் கூறுகிறார். (உவைஸ், அஜ்மல்கான், 1986: ப 280)***

*இந்த வரலாற்றினை சிறந்தமுறையில் கற்பவர்களும் அதனை படிப்பதை கேட்பவர்களும் சொர்க்கத்தைப் பெறும் முகமாக இந்த உலகத்தில் வாழ்வார்களாக என்று வாழ்த்துகிறார். இந்நூலில் நூற்பயன் குறித்தும் ஏனைய தமிழிலக்கிய மரபுகளை பின்பற்றியே கூறியிருக்கிறார். எனினும் இவை இஸ்லாத்திற்கு முரணானவையாகவே காணப்படுகின்றன. ஹூசைன் (ரழி)*

*அவர்களின் வாளின் வலிமையைக் கூறுபவர் நன்மை அடைவர். அத்தகையவர்கள் சுவனத்தை அடைவர் என்று எல்லாம் கூறியிருக்கிறார்.*

*நாட்டுப்படலத்தில் மள்ளர் என அழைக்கப்பட்ட கமக்காரர்கள் அறுவடைக்கு தயாராகும் பொழுது மதுவை வயிறு நிறைய உண்டனர். வயலுக்கு சென்ற அவர்கள், சூரியனையும் விளைச்சல் பெருக வேண்டும் என்று நெற்கதிரையும் வணங்கினவர்களாக இருந்தனர். மது உண்ணுவதையோ ஏக இறைவனைத் தவிர வேறு எவரையோ எதனையோ வணங்குவதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. இவை அனைத்தும் இஸ்லாத்திற்கு மாற்றான செயல் என்பதோடு பாவத்தை விழைவிக்கும் செயலுமாகும். கடவுள் வாழ்த்தில் உள்ள முதல் மூன்று செய்யுட்களிலும் அல்லாஹ் வாழ்த்தப்படுவதை காணலாம். அவற்றுள் ஒன்றினை எடுத்துக் கொள்வோம்.*

***'தூய்மையான நிலையில் எல்லாக் களங்கங்களையும் அகற்றி அல்லாஹ்வை வணங்குவோர் சுவனபதியைச் சேர்ந்தவர்களே ஆவர். அந்த அல்லாஹ் எத்தகையவன்? உருவற்றவன் முதலானவன், ஆதியென்றும் நடுவென்றும் முடிவென்றும் ஒன்றும் இல்லாதவன். கண் இன்றிப்பார்ப்பவன், காதின்றிக் கேட்பவன் போன்ற உருவமாய்ப் பிரகாசமாய் ஆராய்ந்து உணரக்கூடியவர்களுக்கு ஒப்பற்ற பொருளாய் அமைந்தவன், ஆணுமாகாது பெண்ணுமாகாது ஆக இரண்டும் அல்லாத ஒன்றுமாகாது பண்டுதொட்டு நிற்கும் முன்னோன். அவனைத் தொழுவோருக்கு சுவனபதி நிச்சயம் கிடைக்கும்' (உவைஸ், அஜ்மல்கான், 1986: ப 288)***

***'எனவே, நீங்கள் அல்லாஹ்வையே வணங்கி, நன்றி செலுத்துவோரில் ஆகிவிடுவீராக!' (அல்குர்ஆன்:ஸூமர்: 66)***

*மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் 'அல்லாஹ்வைத் தவிர வணங்க தகுதியான நாயன் இல்லை என்றும் நான் அவனது தூதுவர் என்றும் சாட்சி சொல்கின்றேன். இந்த இரண்டு விடயங்களிலும் சந்தேகம் கொள்ளாத நிலையில் யாராவது அல்லாஹ்வை சந்தித்தால் அவன் சுவர்க்கம் நுழைவான்' (அல்ஹதீஸ்: ஸஹீஹ் முஸ்லிம்)*

*'கனகாபிஷேகமாலை' கடவுள் வாழ்த்தில் 27 செய்யுட்கள் உள்ளன. உருவம் இல்லாத இறைவனை உருவமாய் என விவரித்தல் இஸ்லாமிய வரம்பை மீறியதாகும். இவ்வாறு கடவுள் வாழ்த்தில் அல்லாஹ், நபிமார்கள், மலக்குமார்கள் மற்றும் கலீபாக்கள் முதலியவர்களை வாழ்;த்தியுள்ளார்.*

*கம்பராமாயணத்திலும் நளவெண்பாவிலும் இடம்பெற்ற திருமண சுயம்வரம் போன்று ஒரு சுயம்வர விழாவை இங்கு ஒழுங்குசெய்துள்ளார். இதுவும் காப்பியத்துக்கு அழகூட்டுவதற்கேயாம். சுயம்வர நாள் குறிக்கப்பட்டு எல்லா மன்னர்களுக்கும் அறிவிக்கப்பட்டது. உமறுகத்தாப் (ரழி) அவர்களின் உத்தரவின் பேரில் எல்லா மன்னர்களுக்கும் முடங்கல் அனுப்பப்பட்டன.*

*இதற்காக கட்டப்பட்ட வீடு அலங்கரிக்கப்பட்டது. மணிமண்டபம் அணி செய்யப்பட்டது. அதனை சார்ந்த வீதி அழகு செய்யப்பட்டது. கண் கவரக்கூடிய விதமாகப் புனையப்பட்டது. சகருவானின் மாலையைப் பெற வந்தவர்கள் ஒருவர் பின் ஒருவராக வர்ணிக்கும்பொழுது ஆசிரியரின் கற்பனை நயம் பளிச்சிடுகின்றது. உமர் (ரழி) வந்தார். சகருவான் மாலை அணிய மறுத்தாள். தனது முன்னோரைக் கொன்றவர் எனக் குற்றம் சாட்டினாள். தன்னை*

*தண்டனையிலிருந்து காப்பாற்றியவராதலினால் தனது தந்தையைப் போன்றவர் அவர். ஆதலினால் 'பொலனுறு மாலைசூட்டேன்' என்றாள் சகருவான்.*

*ஏனைய சுயம்வர நிகழ்ச்சிகளில் நடப்பது போன்று ஒவ்வொருவரும் சகருவான் முன்னிலையில் வரும்பொழுது அவர்கள் அறிமுகம் செய்யப்பட்டனர். போரில் உசைனாருக்குப் பகைவராக அமைவது போன்று இந்த சுயம்வர விழாவிலும் போட்டியாக வந்துள்ளார். ஆதலால் முடிவு எப்படி இருக்குமோ என்னும் சந்தேகத்தை முதலில் உருவாக்கியுள்ளார். இருவரும் எத்தகைய அழகுடையவர்களாய் இருந்தனர் என்றும் இருவருக்கிடையே வேறுபாடு அவ்வளவாகத் தோன்றவில்லை என்றும் கூறி ஆர்வத்தை தீவிரமாக்கியுள்ளார்.*

*இருவரும் ஒரே இயல்பினராய் இருந்தமையினால் சகருவானுக்கு தெரிவு செய்வதில் சிக்கல் ஏற்படும் எனக் கருதி அங்கிருந்தோர் ஒரு போட்டியை ஏற்படுத்தினர். இப்போட்டியில் யார் வெல்கிறாரோ அவருக்குத்தான் மாலை அணிவிக்கப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டது. குதிரை ஓட்டப் போட்டி ஆரம்பித்தது. எசீத் சென்ற குதிரை சிறிது முந்தியது. இதனை அறிந்த உசைனார் அல்லாஹ்விடம் மன்றாடினார்கள்.*

*அவருடைய வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டு குதிரை முந்திவிட்டது. தாம் புறக்கணிக்கப்பட்டதை உணர்ந்த எசீது, இது உசைனாரின் சூழ்ச்சியே எனக் கருதி 'எப்பொழுதும் நாம் இவரும் பகையாய் இருப்போம்' என்று வஞ்சினம் கூறியதாக பாடியுள்ளார். மணமகள் மணமகனைத் தெரிவு செய்வதற்கு சுயம்வரங்கள் நடைபெறுவதையும் அதற்காக வீடுகள் அலங்கரிக்கப்பட்ட விதத்தினையும் பாடியுள்ளார். இது இஸ்லாத்திற்கு மாற்றமான செயல் என்பதைவிட, தமிழ் இலக்கியங்களின் மரபினைப் பின்பற்றி பாடியுள்ளமையும் காப்பியத்திற்கு அழகூட்டுவதனையுமே நோக்காக கொண்டுள்ளார் என்பதனையும் விளங்கி கொள்ள முடியும்.*

*அடுத்து நடைபெற்றது திருமண விழா. மணம்புரி படலத்தில் திருமண விழா சிறப்பாக நடைபெற்றதென வர்ணித்துள்ளார். மணநாள் நிச்சயிக்கப்பட்டதும் வீடுகளையும் மாடமாளிகைகளையும் அலங்கரிக்கும்படி உத்தரவிடப்பட்டதாம். பறையர்கள் பறையறைந்தனராம். அங்கு பறையர்கள் பறையறைய ஒட்டகங்கள் மீதில் சென்றனர் என்று வர்ணித்துள்ளார். இவ்வறிவித்தலை ஏற்ற மதீன மாநகர மக்கள் விழாக்கோலம் பூணத் தலைப்பட்டனர்.*

***'வீடெல்லாம் தூசி போக்கி விளங்கு வெண் சுதைக டீற்றி***

***பாடுசித் திரங்க டீட்டிப் பகன் மணிவிளக்கம் ஏற்றி;'***

***(உவைஸ், அஜ்மல்கான், 1986: ப 313)***

*இங்கே சித்திரங்களை வீடுகளில் வரைதலும் அழகான கோலங்களை இடுதலும் இஸ்லாத்திற்கு முரணானவையாய் இருந்தும் கூட அவற்றை பொருட்படுத்தாது அவையெல்லாம் இடம் பெற்றிருந்தன என வர்ணித்துள்ளார். காப்பிய அமைப்புக்கு இத்தகைய வர்ணனைகள் இன்றியமையாதன என்பதனால்தான் ஆசிரியர் இவ்வாறு வர்ணித்துள்ளார்.*

*இனி மணமகனின் திருமண உலா வர்ணிக்கப்படுகிறது. எல்லோரும் அங்கு வந்து குழுமினர் ஏழு பருவத்தைச் சார்ந்த பெண்களும் திருமண ஊர்வலத்தை கண்டு ரசிக்க ஒன்று கூடிவிட்டனர்.*


ISBN: 978-624-5736-55-3

*பெண்களை வர்ணிக்கும் போது கேசாதிபாதமாகவோ பாதாதிகேசமாகவோ வர்ணிப்பது காணக்கூடிய அம்சங்களில் ஒன்று. அத்தகைய வர்ணனைகளை இஸ்லாத்தின் அடிப்படையில் தோன்றிய காப்பியங்களில் காணுதல் என்பது மிகவும் அரிதானதே. கனகாபிஷேகமாலையை பொருத்த வரை சமயம் வாய்க்கும் போதெல்லாம் ஆசிரியர் வர்ணிக்க தவறிவிடவில்லை. சகருவானின் புதல்வியை ஆசிரியர் இவ்வாறு கேசாதிபாதமாக வர்ணித்துள்ளார்.*

*இவ்வாறு ஒவ்வொரு அங்கங்களையும் (கூந்தல், புருவம், விழி, கன்னம், இதழ், பல், கழுத்து, தொடை) வர்ணித்திருக்கின்றார்.*

***'அல்லாஹ்வின் தூதரே முஸ்லிம்களில் யார் சிறந்தவர் என்று நான் கேட்டேன். யாருடைய நாவை விட்டும் கையை விட்டும் பிற முஸ்லிம்கள் பாதுகாப்பு பெறுகின்றனரோ அவர்தான் உண்மை முஸ்லிம் என நபியவர்கள் கூறினார்கள்' (அல்ஹதீஸ்: புகாரி, முஸ்லிம்)***

*கனகவிராயர் சியாக் கொள்கைகளில் ஓரளவு ஊன்றித் திளைத்தவர் என்பதற்கு சான்றாக பல கருத்துக்களை கனகாபிஷேகமாலையில் தந்திருக்கின்றார். எசீது படையைச் சேர்ந்த ஒருவனுக்கும் தோகாந்துறுக்கு என்பவனுக்கும் இடையில் நடந்த வாக்குவாதத்தினை சுட்டிக் காட்டி அதன் மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றார். உலகத்திலேயே அமீறுல் முஃமீனின் என்று அழைக்கப்பட்டவர் அலி (ரழி) ஒருவர் மட்டுமே. அந்த மொழி பெறக்கூடியவர் மற்றொருவர் உள்ளார் என்றால் அது அவர்தம் புதல்வராகும். இவ்வாறு கூறப்பட்டதானது இஸ்லாத்திற்கு மாற்றமான செயலாகும்.*

***5. முடிவுரை***

*'கனகாபிஷேகமாலை' காப்பியக் கூறுகள் அனைத்தையும் பெற்ற இன்பத்தமிழ்க் காப்பியம். இஸ்லாமிய சமய மரபும் தமிழ்க் காப்பிய மரபும் பாதிக்கப்படாத நிலையில் காப்பியத்தை படைத்துள்ளார். ஒரு காலக்கட்ட வரலாற்றை உள்ளடக்கிய இக்காப்பியத்தில் சில கற்பித அமைப்புக்களும் காப்பிய போக்குக்காகப் பின்பற்றப்பட்டுள்ளன.*

*கனகாபிஷேமாலையில் நபி(ஸல்) அவர்களின் இறுதிவாழ்க்கை, கலீபாக்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றமை போன்ற வரலாற்று நிகழ்வுகளை செய்யுள்களினூடாக தெளிவுப்படுத்தும் போது பல நிகழ்வுகள் ஆதாரபூர்வமானதாகவும் உண்மைத் தன்மை கொண்டதாகவும் கூறப்பட்டுள்ளன. எனவே அவை இஸ்லாமிய தமிழ் இலக்கிய வட்டத்தில் வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும். அதேவேளை இஸ்லாமிய வரலாற்றை சித்தரிக்கும் போது இஸ்லாமிய மார்க்கத்தில் அனுமதிக்கப்படாத சில விடயங்களையும் கூறியுள்ளார். அவற்றுள் இஸ்லாமிய வரலாற்றோடும் பண்பாட்டோடும் முரண்படும் விடயங்களை பெருமளவில் கையாண்டுள்ளார். ஏனைய புலவர்களும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் இலக்கியத்தின் செழுமை கருதி இஸ்லாத்துக்கு முரண்பட்ட கருத்துக்களை கூறியிருப்பதைப் போன்று கனகாபிஷேகமாலையிலும்; கையாண்டுள்ளார். ஆயினும் அவை தடுக்கப்பட வேண்டிய விடயங்களாகும்.*

*தமிழ் இலக்கிய மரபு சார்ந்து ஐந்நில வர்ணனை பாடி அறபு நாட்டுக் களத்தை தமிழ்க்களம் போல படைப்பதால் கற்பவருக்கு அன்னியத்தன்மை தோன்றாமல் தடுக்கப்படுகிறது. பெண்பாற் பாத்திரங்கள் தனித்துயர்ந்து நிற்குமாறு பாடப்படவில்லை. எட்டு அரசர்களின் வரலாறு கூறும்*


ISBN: 978-624-5736-55-3

*நூலிது. தனித்துயர்ந்த தலைவனாக யாரையும் குறிப்பிட இயலாது. உசைனார் வரையான தலைவர்கள் சம இடம் பெறுவது போலத் தோற்றமளித்தாலும் அலியாரின் வரலாறே நீண்டதாக அமைகிறது. இறைவனே தன்னிகரில்லாத் தலைவன் என்ற ஆசிரியரின் மனக்கருத்து வலிமையுறுகிறது.*

*இஸ்லாமியச் சமய மரபு இதில் காக்கப்பட்டுள்ளது. ஷியாபிரிவில் சிறிது நாட்டம் கொண்டவராயினும் அவர்களது முழுக் கருத்துக்களையும் இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. பதிகப்படலத்தை முன் வைக்காது நான்காவது படலமாக அமைத்துப் புதுமை செய்துள்ளார். கிளைக்கதைகள் இடம் பெறவில்லை. தமிழரின் பண்பாட்டம்சங்களை ஏனைய இலக்கியங்களில் பின்பற்றியிருப்பதை போன்று கனகாபிஷேகமாலையிலும் பின்பற்றியுள்ளார். இலக்கிய நயத்தை மேம்படுத்துவதற்காக வரலாற்றில் நிகழ்ந்ததாக பல கற்பனைகளையும் முரணான வர்ணிப்புக்களையும் கூறியுள்ளார். இவ்வாறு ஆதாரமற்ற விடயங்களைக் கூறியிருப்பது மார்க்கம் தொடர்பான பிழையான கண்ணோட்டத்தை ஏற்படுத்திவிடும். இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தைப் பொருத்த வரையில் இஸ்லாமிய வரையறைக்குள் உட்பட்டதாக ஆதாரப்பூர்வமான விடயங்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். அவ்வாறான இலக்கியங்கள் தரமானதாகவும் வரவேற்க கூடியதாகவும் அமையும்.*

***6. சமர்ப்பணம்***

*'இஸ்லாமிய வரலாற்றை எடுத்துரைப்பதில் கனகாபிஷேகமாலை பெறும் முக்கியத்துவம்' எனும் தலைப்பிலான இவ்வாய்வை உரிய காலத்திற்குள் சிறப்பாக செய்து முடிப்பதற்குரிய அறிவினையும் ஆற்றலையும் தந்த எல்லாம் வல்ல இறைவனுக்கே எனது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். என்னால் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வினை திறம்பட செய்து முடிக்க ஆரம்பம் முதல் இறுதி வரை ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கி ஊக்கப்படுத்தி, சிறந்த வழிகாட்டியாக இருந்து தன் வேலைச்சுமைக்கு மத்தியிலும் சிரமம் பாராது நுணுக்கமாக நோக்கி, உரிய திருத்தங்களை மேற்கொண்டு தொடர்ந்து எழுதுவதற்கு ஊக்கமளித்த என் மதிப்பிற்கும் விருப்பத்திற்குமுரிய மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி, ராஹிலா ஷியாத் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இவ்வாய்வினை சிறப்பான முறையில் மேற்கொள்வதற்கு மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி, சாதியா பௌசர் அவர்களின் ஆய்வே காரணமாக அமைந்தது. எனவே இவ்வாய்வினை திறம்பட செய்து முடிக்க உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.*

***7. உசாத்துணைகள்***

*(2008).அல்குர்ஆன் (தமிழ் மொழிப்பெயர்ப்பு).ஜமாஆத் அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யா, இலங்கை.*

*சுப்பிரமணியன், ச.வே., (1979). காப்பிய புனைதிறன். தமிழ்ப் பதிப்பகம். சென்னை.*

*செய்யிது முஹம்மது ஹஸன், (1990). கனகாபிஷேகமாலை. ஐந்தாம் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு. கீழக்கரை.*

*நஜீமுதீன், பீ., (1994). கனகாபிஷேகமாலை. உலக தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை.*

*முகம்மது உவைஸ், ம. அஸ்மல்கான், பீ. மு., (1986). இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு. மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*

*முஹம்மது பின் இஸ்மாயில், (1994). நபிகளாரின் பொன்மொழிகள் ஸஹீஹுல் புகாரி (இரண்டாம் பாகம்): றஹ்மத் அறக்கட்டளை, சென்னை.*